1971 ஜூலை 14]

## Sports Stadium at Kancheepuram

* 227 Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether any sports stadium is to be constructed at Kancheepuram; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) செங்கை மாவட்ட நலக் குழுவும், மாவட்ட விளையாட்டுக் குழுவும் ரூபாய் ஏழு லட்சம் செலவில் காஞ்சிபுரத்தில் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டத் திட்டமிட்டுள்ளன.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, விளையாட்டுத் திடல் இல்லாத மாவட்டத் தலைநகரங்களிலேயும் இப்படிப்பட்ட விளையாட்டுத் திடல்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் இப்படிப்பட்ட ஒரு விளையாட்டு அரங்கம் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் பல மாவட்டத் தலைநகரங்களில் நடைபெற்று வருகிறது. முயற்சிகளை எடுக்கும்பொழுது அரசு ஒரு இலட்சம் ரூபாய் மானியமாகவும், மற்றக் காரியங்களை அங்கே குழுக்கள் அமைத்து, மாவட்ட விளையாட்டுக் குழுவும் திரட்ட வேண்டுமென்ற அடிப்படையில் நிதிகளை வைத்து இப்படிப்பட்ட பணிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி :** தலைவரவர்களே, நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் விளையாட்டு அரங்கம் கட்டலாம் என்று தெரிவித்தார்கள். மாவட்டத் தலைநகரமே இல்லாத எங்கள் இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் எங்கு அமைப்பது என்பதைத் திட்டவட்டமாகத் தெளிவாகக் கூறுவார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒருமித்த கருத்தைத் தெரிவித்தால் மாவட்ட விளையாட்டுக் குழுவும், மாவட்ட நலக் குழுவும் சேர்ந்து ஒரு முடிவை எடுத்துக் கூறினால் அதற்கேற்றபடி அரசாங்கம் உதவி செய்ய முன்வரலாம்.

## தேவஸ்தானங்களால் பராமரிக்கப்படும் படிப்பகங்கள்

* 237 **வினா—திரு. சி. கணேசன் :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஹிந்து அறநிலைய நிர்வாகத் துறையின் கீழுள்ள தேவஸ்தானங்களில் எத்தனை இடங்களில் (லைப்ரரிகள்) படிப்பகங்கள் உள்ளன ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இந்து சமய—அறநிலைய (நிர்வாகத்) துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 203 சமய நிறுவனங்கள் நூலகங்கள் வைத்துப் பேணி வருகின்றன.